பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 20 ஞாயிற்றுக்கிழமை 02.02.2025 கதிர் 086

# தலைவர் மாவையின் இறுதிக் கிரியை இன்று

## காலை 8 மணிக்குத் தொடங்கும்

மறைந்ததலைவர்மாவைசேனாதிராசாவின் இறுதிக் கிரியை கள் இன்று மக்கள் அஞ்சலி யுடன் நடைபெறவுள்ளன. மாவிட்டபுரத் தில் உள்ள அன்னாரது இல்லத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக அவரது புகழுடல் வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று காலை எட்டு மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

அதனைத்தொடர்ந்து 10.30இற்கு அஞ்சலிக்கூட்டம்நடைபெற்றுநண்பகலளவில் இறுதி ஊர்வலம் இடம்பெறவுள்ளது. மாவிட்டபுரம் தச்சன்காடு இந்துமயானத்தில்



அன்னா ரது பூதவுடன் தகனம் செய்யப்பட வுள்ளது.

1942ஆம் ஆண்டு ஒக்டோபர் ☞2

## இனி து ரகசியம் அல்ல!

நேற்று முதல் வாகனங்களை மீண்டும் இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் பொதுப் பாவனைக்கான வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்போது இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வழி வகைகளில் தனிப் பாவனைக் கார்களை இறக்குமதி செய்து ☞2

## ரோகிங்யா அகதிகளை திருப்பியனுப்ப முடியாது

### மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

அனைத்து நபர்களையும் பலவந்தமாக காணாமல்போதலில் இருந்து பாதுகாப்பதற்கான ஒப்பந்தத்தின் கீழ் அகதிகள், ☞10

## மகிந்தவை வீட்டைவிட்டு வெளியேற்ற சட்டமூலம்

### ஆளும்தரப்புத் தயாராகின்றது

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை உத்தியோகபூர்வ இல்லத்தைவிட்டுவெளியேறுமாறுஎழுத்து மூலம் அறிவிக்காவிட்டாலும், அதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஆளும்தரப்பு தயாராகி வருகிறது.

பொது மக்கள் பாதுகாப்பு ☞9

## எதிர் அரசியலில் இருந்தாலும் சமாதானக் கரங்களை நீடியவர்

### மாவை குறித்து மகிந்த அஞ்சலிக் குறிப்பு

எதிர் அரசியலில் ஈடுபட்டிருந்தாலும் சமாதானத்துக்கான கரங்களை நாங்கள் நீட்டிய போது மாவை சேனாதிராசா சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மாவை.சேனாதிராசாவின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்தார். அதில் ☞2



## தனிப்பட நெருக்கமான ஒருவரை இழந்துவிட்டதாக உணர்கின்றேன்

### ரணில் இரங்கல் குறிப்பு

மாவை சேனாதிராசாவின் மறைவை எனக்கு தனிப்பட்ட முறையில் நெருக்கமான ஒருவரை இழப்பதாக உணர்கின்றேன். அவரது இழப்பு உண்மையிலேயேஈடுசெய்யமுடியாதவொன்றாகும் எனமுன்னாள்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க ☞8

## தமிழ்த் தேசிய அரசியலின் மூலக் கல்லே மாவைதான்

### சுமந்திரன் புகழாரம்

மாவை அண்ணன் எமது தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஓர் அத்திவாரக்கல்லாக இருக்கின்றார். இன்றைய சூழலில் இருந்து பார்த்தால் அத்திவாரத்தில் அவரை ஓர் மூலக் கல்லாகக் காணலாம் என்று தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

சுமந்திரன் தமிழ் அரசுக் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் மாவை சேனாதிராசாவின் புகழுடலுக்கு நேற்று அவரது இல்லத்தில் ☞2

## அரச சொத்துக்கள் தொடர்பாக முறையான தணிக்கை இல்லை

அரச சொத்துக்கள் குறித்து இன்றுவரை முறையானதணிக்கைநடத்தப்படவில்லையென்று கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.எம்.சி. விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

அரசு அதிகாரிகள் தங்கள் கடமைகளை முறையாகச் செய்யாததால் இதுபோன்ற நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கணக்காய்வாளர்நாயகம் கொழும்பில் கைத்தொழில் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இந்தக் கருத்தை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச சொத்துக்களை ஒரே ☞9

## இந்திய மீனவரைக் கட்டுப்படுத்த கடற்படைக்கு முழு ஒத்துழைப்பு

### மன்னார் மாவட்ட மீனவர்கள் அறிவிப்பு

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்றமீனவர்களைக்கட்டுப்படுத்த இலங்கைஆளும்தரப்புமுன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் குறிப்பாக கடற்படையினரின் நடவடிக் கைகளுக்கு நாங்கள் முழுமையாக உறுதுணையாக இருப்போம் என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாச தலைவர் நூர் மொஹமட் ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மதியம் செய்தியா ளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்திய மீனவர்கள் கடந்த வாரம் இலங்கை கடற்பரப்பில் ☞8

## எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஒத்துழைப்புத் தாருங்கள்

### காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் அழைப்பு

அரசியல் கைதிகள் விடுதலை, காணி அபகரிப்பு போன்ற பிரச்சனைகள் தீர்வின்றி தொடரும் நிலையில் சுதந்திர தினத்தை கொண்டாட முடியாது எனவும், சுதந்திர தின எதிர்ப்பு போராட்டத்துக்கு ஒத்துழைக்குமாறும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று சனிக்கிழமை (01) ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பிலேயே ☞8

## நெல் உலரவைக்கும் இயந்திரத்தை முல்லைத்தீவிற்குப் பெற்றுத் தருக

### ரவிகரன் எம்.பி. வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் ☞9

## ‘தூய இலங்கை’ செயற்றிட்டம் யாழ், நல்லூரில் நாளை ஆரம்பம்

ஜனாதிபதியினதும்ஆளும்தரப்பினதும்ஏற்பாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் ‘தூய இலங்கை’ செயற்றிட்டத்தின் வடக்கு மாகாணத்துக்கான அறிமுக நிகழ்வு நாளை யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட திருநகர் வட்டாரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் தெரிவித்தார்.

அவர் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செயலகத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பசுமையான - அழகான - சுத்தமான நகரமாக யாழ்ப்பாணத்தை மாற்றும் இலக்கோடு யாழ். மாநகர சபை பல நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அதற்காக சில வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

திண்மகக் கழிவகற்றல் மேம்படுத்தப்படுத் தப்பட்டுள்ளதுடன் கண்காணிப்புப் பொறிமுறை யும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கை கள் எடுக்கப்படுகின்றது. மக்களை விழிப்புணர் வூட்டும் செயற்றிட்டமும் சமாந்திரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு குடியிருப்புக்களும்குப்பைகளைத்தரம்பிரித்து ☞8

## இனி இது .....

விற்பதாயின் ஒரு கோடி ரூபாய் இல்லாமல் இனி ஒரு கார் வாங்க முடியாது என்பதுதான் உண்மை நிலையாம்.

2015 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அதிசொகுசு வரிக்கு அமைவாக இம்முறை முதன் முறையாக வாகனங்களை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய ஒழுங்குவிதிகளுக்கு அமைய 20 சதவீதமாக காணப்பட்ட தீர்வை வரி 30 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சலுகைவரிவட்டிவீதத்தின் அடிப்படையில் மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்வதற்காக விநியோகிக்கப்படும் அனுமதி பத்திரத்தை பயன்படுத்தி மோட்டார் வாகனத்தைஇறக்குமதிசெய்வதற்கும் அல்லது சுங்கத்தில் இருந்து விடுவிப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. சட்டத்துக்கு முரணாக வாகனம் இறக்குமதி செய்யப்பட்டால் குறித்த இறக்குமதியாளர் தனது சொந்த செலவில் அந்த வாகனத்தை 90 நாட்களுக்குள் மீள் ஏற்றுமதி செய்ய வேண்டும் எனவும் நிதியமைச்சு அறிவித்துள்ளது.

தனியார் மோட்டார் வாகனம், மின்சார மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை இரத்துச் செய்யும் வகையில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஜனவரி 31 வர்த்தமானி அறிவித்தலை பிரசுரித்திருந்தார். இந்த வாகன இறக்குமதிக்கு உரியவகையில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாளருக்கு விசேட ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கார், வான், பஸ், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், பொது போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் பேரூந்து மற்றும் மோட்டார் வாகனம், விசேட தேவைகளுக்காகபயன்படுத்தப்படும்வாகனம், ஏனைய மோட்டார் எஞ்சின் பாவனையற்ற பொறிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கபப்பட்டுள்ளது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டின் 304ஆம் பிரிவுக்கமைய தனிப்பட்ட பாவனைக்கான வாகன இறக்குமதிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

வாகன இறக்குமதிக்காக நிதியமைச்சு 09 நிபந்தனைகளை விதித்துள்ளது. வெளிநாட்டு கையிறுப்பை பாதுகாத்தல், பெருமளவிலான வாகனங்களை இறக்குமதி செய்வதை தவிர்த்தல்,அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ளல், பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை கருத்திற் கொண்டு இந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

வாகனங்களுக்கு அறவிடப்படும் வரி எவ்வாறுதீர்மானிக்கப்படும்என்பதுசிக்கலானதான காணப்படுகிறது. இதனை தெளிவுப்படுத்தும் வகையில் வாகனங்களுக்குரிய வரிகளை நிதியமைச்சு தெளிவுப்படுத்தியுள்ளது.

வாகன இறக்குமதியின் போது அதிசொகுசு வரி, என்ஜின் கொள்ளளவு அடிப்படையில் அறவிடப்படும் சீசி வரி, சுங்க வரி, சேர்பெறுமதி வரி (வற்) ஆகிய நான்கு வரிகள் பிரதானவையாக காணப்படும்.இதில் அதிசொகுசு வரி இம்முறை பிரதானதாக காணப்படுகிறது.

புதிய அதிசொகுசு வரி சட்டத்துக்கமைய முதன்முறையாக இந்த ஆண்டு வாகனம் இறக்குமதி செய்யப்படுகிறது. 500 இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய வாகனத்துக்காக பல தொகுதிகளின் கீழ் அதிசொகுசு வரி அறவிடப்படும். அதற்கமைய அறவிடப்படும் அதிக பட்ச வரிவீதம் 120 ஆக காணப்படுகிறது.

இவற்றின் அடிப்படையில் ஜப்பானிய வாகனங்களின் விலை எக்கச்சக்கம் எகிறப் போகிறது. அதற்கு மற்றொரு காரணமும் இருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது. ஜனப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டிலிருந்து 5 அல்லது 7 ஆண்டுகள் பழமையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக 2 ஆண்டுகள் பழமையான வாகனங்களைஇறக்குமதிசெய்யஆளும்தரப்பு முடிவு செய்ததே என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரெஞ்சிகே தெரிவித்துள்ளார்.

இந்த முடிவால், இந்த நாட்டின் ஒரு சாதாரண குடிமகனால் ஒரு கோடி ரூபாய்க்குக் குறைவாக வாகனத்தை கொள்வனவு செய்யமுடியாது. இறுதியில் என்ன நடக்கும் என்றால், நாட்டின் சாதாரண குடிமகனால் வாகனத்தை வாங்க முடியாத நிலை ஏற்படும். இதுவே சுமார் 5 ஆண்டுகளுக்கு முற்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தால் சுமார் 6 மில்லியன் முதல் 6.5 மில்லியன் ரூபாய்க்கு வாகனத்தை வாங்கியிருக்கலாம். ஆனால் அது இன்று இல்லாமல் போயுள்ளது.

அதன்படி, Toyota Raize 1200 cc காரின் விலை சுமார் ஒரு கோடியோ 60 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கக்கூடும். அத்துடன் Toyota y-aris வாகனத்தின் விலை ஒரு கோடியே 10 லட்சம் ரூபாயாக அதிகரிக்கக்கூடும்.

இதற்கிடையில், சுமார் ஒரு கோடியோ 95 இலட்சம் பெறுமதியான Honda Vezel 1500cc ஹைப்ரிட் கார் சுமார் 2 கோடியே 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் பலரால் விரும்பப்படும் காரான Wagon R காரின் விலை ஒரு கோடி ரூபாயைவிட அதிகரிக்கலாம். ஆக மொத்தத்தில் இனி மத்திய தர வர்க்கத்தினருக்கு கார் என்பது வெறும் கனவுதான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தலைவர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

27ஆம் திகதி பிறந்த மாவை.சோ.சேனாதிராஜா உடல்நலக்குறைவினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகள் பலனின்றிய நிலையில் கடந்த மாதம் 29ஆம் திகதி இயற்கை எய்தியமை குறிப்பிடத்தக்கது.

"தமிழ்த் தேசத்தின் குரலாகவும், தமிழ் மக்களின் குரலாகவும் நீண்ட காலம் பயணித்த மாமனிதரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவருமான மாவை. சோமசுந்தரம் சேனாதிராஜாவின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. இதில் அனைவரையும் பங்கெடுக்குமாறுஅன்புடனும்உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றோம்" என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

எம் தேசத்தின் குரலின் புகழுடலுக்குப் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அதன் பிரதிநிதிகள், பொது மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இன்றைய இறுதி நிகழ்வுகளில் அனைவரையும்பங்கெடுக்குமாறுஅன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றோம் -என்றார்.

## எதிர் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான உறுப்புக் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் இறப்புச் செய்தியை கேட்டு அதிர்ச்சியடைந்தேன்.

எமக்குஎதிர் அரசியலில் ஈடுபட்டிருந்தாலும் நாடாளுமன்றத்தில் சந்திக்கையில் இணக்கமாகவே செயற்படுவார். சமாதானத்துக்கான கரங்களை நாங்கள் நீட்டியபோது மாவை சேனாதிராசா சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.

காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன். அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது.

## தமிழ்த் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்தினார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுடைய அரசியல் என்று வருகின்றபோது மாவை சேனாதிராசாவின் சரித்திரம் மக்களுடைய அரசியல் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது. எந்தவிதத்திலும் பிரிக்க முடியாதது. எங்களுடைய நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததாகச் சொல்லப்பட்ட 1948ஆம் ஆண்டுக்குப் பிறகு என்ன விதமாக தமிழர் அரசியல் நகர்ந்து வந்தது என்பதற்கு அவருடைய வாழ்க்கையே சரித்திரமாக இருக்கின்றது.

1960ஆம் ஆண்டுகளிலே சத்தியாக்கிரகப் போராட்டங்களுக்கு ஊடாக அவர் அரசியலுக்கு வந்தவர். அதன் பின்னர் 1970களிலே முதலாவது புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டபோது அதிலே தமிழ மக்கள் தேசிய வாழ்க்கையில் இருந்து வெளியே தூக்கி எறியப்பட்டார்கள். அந்தக் காலங்களில் எல்லாம அதை முற்றாக நிராகரித்து அதற்கு எதிராகப் போராட்டம் நடத்திய இளைஞர்களில் முதன்மையானவர்களில் ஒருவராக அவர் இருந்தார்.

எனக்கு நினைவு தெரிந்த நாட்களில் இருந்து இந்த மூவர்களுடைய பெயர்கள்தான் நினைவுக்கு வரும். அதாவது காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராஜா இந்த மூன்று பேரின் பெயர் ஒலிக்காத நாள் கிடையாது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் சுதந்திரன் பத்திரிகை வெளிவருகின்றபோது அவர்களுடைய பெயர்கள். அவர்கள் சிறையில் வாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்தத்தடவையில் 42 தமிழ் இளைஞர்கள் எந்தவித குற்றச்சாட்டும் இல்லாமல் வெறுமனே அரசியல் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டு இருந்தார்கள். நாங்கள் இன்றைக்கு அரசியல் கைதிகளைப் பற்றி சொல்லுகின்றோம்.

1976 ஆம் ஆண்டு அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு நடக்க இருந்த வேளையில் இவர்கள் அனைவரும் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த காலத்தை மீட்டுப் பார்க்கின்றேன். சுதந்திரன் பத்-திரிகையிலே 42 மெழுகுதிரிகள் எரிந்து நூர்த்துப் போகின்ற படம் சிறப்பிதழாக வெளிவந்தது. இன்னமும் ஞாபகத்தில் இருக்கின்றது.

இவர்களிலே ஐந்து பேர் தலைவர்கள். அவர்கள்இணங்கினால்தான்உண்ணாவிரதம் கைவிடப்படும் என்று தீர்மானித்த காரணத்தினாலேஐந்துபேரையும்வெவ்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றிவிட்டார்கள். அதில் மாவை அண்ணண் மோகம்பரை சிறைச்சாலையில். அவர்கள் ஒருவருடன் ஒருவர் பேச முடியவில்லை. மற்றைய நான்கு பேரும் காலக் கிரமத்திலே உணவூட்டி ஊசி செலுத்தி அவர்களைநிமிரவைத்துவிட்டார்கள். ஆனால்,மாவைஅண்ணண்தான்மிகக்கூடிய காலம் சிறையில் வாழ்ந்து வந்திருந்தார். அவரை இரத்தத்தால் திலகமிட்டு தமிழ் மக்கள் வரவேற்றனர்.

இவையெல்லாம் எமது தமிழ்த் தேசிய அரசியல் வாழ்க்கையிலே அடிப்படையான அத்திவாரங்களாக இருக்கும் விடயங்கள். மாவை அண்ணன் எமது தமிழ்த் தேசிய

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# உப்பு விலை அதிகரிக்கும்

இந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்வதில் ஏற்படும் செலவுகள் அதிகரித்துள்ளதால் இம்மாதம் உப்பின் விலையும் அதிகரிக்கக் கூடும் என அம்பாந்தோட்டை உப்பு நிறுவனத் தலைவர் டீ.கே.நந்தன திலக தெரிவித்துள்ளார்.

அதற்கமைய 400 கிராம் உப்பு பக்கெட்டின் விலை 120 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் உப்பு பக்கெட்டின் விலை 180 ரூபாவாகவும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்திய சீரற்ற காலநிலை காரணமாக உள்ளூர் உப்பளங்கள் சேதமடைந்ததைத் தொடர்ந்து, இந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்வதற்கு இரண்டு இறக்குமதியாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது.

அதற்கமைய இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1485 மெட்ரிக் தொன் முதல் தொகுதி உப்பு கடந்த ஜனவரி 27ஆம் திகதி நாட்டை வந்தடைந்தது. நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக இவ்வாண்டின் முதலாம் காலாண்டில் உள்நாட்டு சந்தையில் வீட்டுத் தேவைகளுக்கும் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கான உப்பு விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படலாமென அவதானிக்கப்பட்டது.

அதற்குத் தீர்வாக தயார் செய்து சந்தைக்குவிநியோகிப்பதற்கானதீர்வை வரி வீதத்திற்கமைய பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உப்பை அரச வர்த்தக (பலநோக்கு) கூட்டுத்தாபத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்தது.

# கடல்வளத்தைப் பாதுகாக்க விசேட திட்டம் உருவாகும்

## கடற்றொழில்துறை அமைச்சர் தெரிவிப்பு

எமது நாட்டுக்குரிய கடல் வளம் நிச்சயம் பாதுகாக்கப்படும் எனவும், அதற்கான விசேட வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படும்எனவும்கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். அல்லைப்பிட்டிய பகுதியில் வெண்புரவி புனித அந்தோனியார் கடற்றொழில் கிராமிய அமைப்பின் ஏற்பாட்டில்,அமைச்சருக்கானவரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பங்கேற்றிருந்த அமைச்சருக்கு மக்களால் நன்கு வரவேற்பளிக்கப்பட்டது. மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், அவர்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்துகொண்டார்.

தமது பகுதியில் கடல் அரிப்பை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தனர். அத்துடன், மீனவர்கள் இளைப்பாறுவதற்கு உரிய வசதிகள் இல்லை எனவும், உரிய வகையில் நங்கூரமிடும் ஏற்பாடு உட்பட கடற்றொழிலை உரிய வகையில் முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்துதருமாறு அமைச்சரிடம் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை, இழுவைமடிப் படகு பயன்பாடு உள்ளிட்டவற்றால் தமக்கு ஏற்படும் வாழ்வாதார பாதிப்புகள் பற்றியும் மக்கள் எடுத்துரைத்தனர்.

மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளைநிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் பதிலளித்தார். அத்துடன், இலங்கையின் கடல்வளத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தமது ஆளும்தரப்பின் முதன்மை நோக்கங்களுள் ஒன்றாகும் எனவும், அதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும்எனவும்குறிப்பிட்டார்.

தனக்கான வரவேற்பு நிகழ்வை மிகவும்சிறப்பாகஏற்பாடு செய்திருந்த வெண்புரவி புனித அந்தோனியார் கடற்றொழில்கிராமியஅமைப்பினருக்கு அமைச்சர் நன்றிகளையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், மீனவ சங்கத் தலைவர் அன்ரன், பங்குத் தந்தை ஜெகன்குமார் கூஞ்ஞ, கிராம சேவகர் சசிகாந், பிரதேச செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ் பேசும் மக்களுக்கான அரசியலில் நிரப்ப முடியாத வெற்றிடம் ஏற்பட்டுள்ளது

## மாவை ஐயாவின் மறைவு குறித்து யாழ். முஸ்லிம்கள் இரங்கல்

(பாறுக் ஷிஹான்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஸ்ட பெருந்தலைவரும் முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ சேனாதிராஜா ஐயாவின் இழப்பானது தமிழ்த் தேசிய அரசியலிலும், தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் பயணத்திலும் என்றும் நிரப்ப முடியாத வெற்றிடமாகும். அன்னாரின் மறைவுக்கு யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் சார்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் 13 ஆம் வட்டார மூலக் கிளை செயலாளர் என்.எம்.அப்துல்லாஹ் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டித்து, போராடி சிறைவாசமும் அனுபவித்தவர் மாவை சேனாதிராஜா. அன்னாரின் இழப்பு தமிழ் பேசும் மக்களின் அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும். முஸ்லிம் மக்களுக்கும் மாவை சேனாதிராஜா ஐயா அவர்களுக்குமான தொடர்பு மிக நெருங்கியதாகவே ஆரம்பம் முதல் இறுதிவரை காணப்பட்டது. அவர்களின் நீண்டகால அரசியல் தீர்வு குறித்த பயணத்தில் குறிப்பாக வடக்குகிழக்கு முஸ்லிம்மக்களையும் அரவணைத்தேஅவரதுசெயற்பாடுகள் அமையப்பெற்றிருந்தன.

குறிப்பாக வடக்கிலே யாழ்ப்பாணத்தில்மீள்குடியேறிவரும் முஸ்லிம் மக்களின் தேவைகள் மற்றும் மீள்குடியேற்றம் சார்ந்த விவகாரங்களில் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவராகவும் செயற்பட்ட காலத்தில் பல்வேறு வழிகளிலும் தன்னால் முடிந்த பங்களிப்புக்களை தான் வகித்த பதவி வழியாகவும் கட்சி வாயிலாகவும் வழங்கிய பெருந்தலைவர் ஆவார்.

அந்த வகையில் அவரது நாடாளுமன்ற பதவிக் காலப்பகுதியிலும் பல்வேறு நிதி ஒதுக்கீடுகளை யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் வாழும் முஸ்லிம் வட்டாரங்களான 10ஆம் மற்றும் 13ஆம் வட்டாரங்களுக்கு ஒதுக்கியிருக்கின்றார். பல மில்லியன் கணக்கிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இது அவரது அனைத்து மக்களையும் அரவணைத்துச்செல்லும் குணத்தைக் கொண்ட உன்னத தலைவர் என்பதை காட்டி நிற்கின்றது.

வடக்கு கிழக்கு தமிழ் பேசும்



மக்களின் ஏகோபித்த அடையாளமாக விளங்கிய பழைமை வாய்ந்த தமிழ்த் தேசியக் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வா அவர்களின் காலப்பகுதியிலிருந்து கட்சியில் உறுப்பினராக செயற்பட்டு நீண்டகாலமாக கட்சியின் பெருந்தலைவராக கட்சியையும், வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களையும் தலைமை தாங்கி வழிநடத்தி வந்தவரின் இழப்பு பேரிழப்பாகும்.

அவர் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களை என்றுமே பிரித்துப் பார்த்தது கிடையாது. அவரது ஒவ்வொரு உரைகளும் முஸ்லிம் மக்களையும் இணைத்ததாக தமிழ் பேசும் மக்கள் என்றே என்றும் அமைந்திருக்கும். 1990 ஆம் ஆண்டு வெளியேற்றத்திற்கு முன்னர் முஸ்லிம் மக்களுடன் அவருக்கும், கட்சிக்கும் இருந்த பிணைப்பானது வெளியேற்றகால இடைவெளியின் பின்பு குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாணசபைக் காலத்திருந்து மீண்டும் இன்னும் மிக நெருங்கியதாக அவருக்கும், கட்சிக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. அந்த நெருக்கமும், தொடர்பும் இன்றுவரை காணப்படுகின்றது. இவ்வாறான தலைவர்களின் மென்போக்குகளே இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிக்கும் - யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களுக்குமிடையிலான பிணைப்பை இன்றுவரை தொடர்ச்சியாக முன்னோக்கி கொண்டு செல்கின்றது.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்துக்கும், உறவுகளுக்கும், மக்களுக்கும் குறிப்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தொண்டர்களுக்கும் யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று என்.எம்.அப்துல்லாஹ் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் பயணத்தில் மாவை சேனாதி என்ற பாத்திரம் அடையாளமாக என்றுமிருக்கும்

## சமத்துவக் கட்சி சந்திரகுமார் இரங்கல்

2020 தேர்தலில் வெற்றி பெறவில்லை என்றாலும் அரசியல் பயணத்தில் மாவை சேனாதிராஜா என்ற பாத்திரத்தின் பங்களிப்பு வரலாற்று அடையாளமாக என்றுமிருக்கும் என சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.

மாவை சேனாதிராஜாவின் மறைவுக்காக சமத்துவக் கட்சி வெளியிட்டுள்ள இரங்கலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான கோசத்தோடு பயணித்த மூத்த அரசியல் தலைவர் மாவை சோனாதிராஜா அவர்கள்.

இவர் 1970களிலிருந்து தமிழரின் உரிமைக்கான அரசியல் கோஷத்தோடு பயணித்தவர். இதற்காக ஆரம்ப காலத்தில் நீண்ட சிறை வாழ்க்கையை அனுபவித்தவர். பின்னாளில் நாடாளுமன்ற அரசியலில் ஈடுபட்டு, அந்த அரசியலைத் தொடர்ந்தவர்.

அவருடைய அரசியல் காலமானது நெருக்கடிகளும் ஏற்ற இறக்கமும் கொண்டதாக இருந்தது. ஆயினும் அவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து நின்று, தன்னை நிலைப்படுத்திக்கொண்டார்.

அவர் விரும்பி முன்னெடுத்த அரசியல் வெற்றியைப் பெறவில்லை என்றாலும் அந்த அரசியல் பயணத்தில் மாவை சேனாதிராஜா என்ற பாத்திரத்தின் பங்களிப்பு வரலாற்று அடையாளமாக என்றுமிருக்கும்.

அந்த வகையில் மூத்த அரசியல் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு சமத்துவக் கட்சி தனது அஞ்சலியை செலுத்தி நிற்கிறது என சமத்துவ கட் சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் வெளியிட்டுள்ள அஞ்சலிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் நீரில் மூழ்கிய இளைஞனின் சடலம் மீட்பு

திருகோணமலை கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி காணாமல்போன இளைஞனின் சடலம் நேற்று (சனிக்கிழமை) காலை மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகர் கடற்பகுதியில் வியாழக்கிழமை நான்கு நண்பர்கள் கடல் குளித்துக்கொண்டிபோது கடல் அலையில் சிக்கி அனைவரும் அள்ளுண்டு சென்றனர்.

இதில் மூவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதுடன் காணாமல்போயுள்ள இளைஞனை தேடும் பணியை வியாழக்கிழமை முதல் முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையிலேயே குறித்த இளைஞனின் சடலம் கடலில் மிதந்த நிலையில் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது.



மீட்கப்பட்ட இளைஞன் திருகோணமலை - சீனக்குடா பகுதியை சேர்ந்த 20 வயதானவர் ஆவார்.

மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தேசத்தின் குரல் அமைப்பின் அனுசரணையில் சாதாரண தர. மாணவர்களுக்கு கருத்தரங்கு

(சியாஜ்)



புத்தளம் வேப்பமடு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இம்முறைகல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுத உள்ள மாணவர்களுக்கான இலவச கணிதப் பாட கருத்தரங்கு ஒன்று தேசத்தின் குரல் அமைப்பின் அனுசரணையில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.ஐ சர்மிள் தலைமையில் நடைபெற்றது .

ஆயிரம் மாணவர்களுக்கு இலவசகணிதக் கருத்தரங்கு என்னும் வேலைத்திட்டத்தின் ஊடாகஆரம்பிக்கப்பட்டுள்ளஇத்திட்டத்தின் ஊடாகஇடம்பெற்றமுதலாவதுகருத்தரங்கில் தேசத்தின் குரல் அமைப்பின் உயர்பீட உறுப்பினர்களும், ஆலோசகர்களுமான ஏ.ஏ தாரிக், ஏ.எல் ஹமாசி, ஏ.எம் அனீஸ் மற்றும் ஒபேட் அமைப்பின் தலைவர் எம் டி.எம் நபீல் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## துறைமுகப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு தேவை

கொழும்பு துறைமுகத்தில் உள்ள நெரிசல், கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்படும் தாமதம் என்பனதான் கடந்த ஒரு மாதமாக பெரும்பேசு பொருளாக இருக்கின்றது. தேக்கநிலையை நீக்கி சரக்கு அனுமதி நடவழக்கைகளை மீண்டும் நிலையான ஓட்டத்திற்கு கொண்டு வர ஆளும்தரப்பு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆனாலும் நிலமை சீராகவில்லை. கொழும்பு துறைமுகத்தின் உள்கட்டமைப்பு குறைபாடுகள் மற்றும் மேம்படுத்த வேண்டிய அவசியம் நீண்ட காலமாக அறியப்பட்டு, அவை நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

இருப்பினும், கடந்த ஆறு மாதங்களாகக் கப்பல் போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில், தற்போதைய தேக்கநிலைக்குப் பின்னால் உள்ள முக்கிய காரணங்களில் ஒன்று சுங்கத் துறைக்குள் நீண்டகாலமாக நிலவும் தண்டனை விலக்கு கலாச்சாரம் என்று பல பார்வையாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். கிட்டத்தட்ட சில மாதங்களுக்கு முன்பு தொடங்கிய நெரிசல், துறைமுகத்திலிருந்து பல நூறு கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதன் மூலம் படிப்படியாகக் குறைந்துள்ளது. துறைமுக நெரிசல் நெருக்கடி அரச வருவாயில் தினமும் ரூ. 3–4 பில்லியன் அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக சில பொருளாதார வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சில பார்வையாளர்கள், இந்த பின்னடைவின் ஒரு பகுதி 'மனிதனால் உருவாக்கப்பட்ட நெருக்கடி' என்று சுட்டிக்காட்டியுள்ளனர், மேலும் சட்ட அமலாக்க நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்படுவதைத் தடுக்க ஆளும்தரப்பு மீது அழுத்தம் கொடுக்க, ஒரு சமூகமாக சுங்கத் துறை இந்த மெத்தன போக்கு வேலைலையச் செய்வதாகக் குறிப்பிடுகின்றனர்.

சுங்கத் துறை அதன் சக்திவாய்ந்த தொழிற்சங்கத்தைப் பயன்படுத்தி அரசுத் துறை சீர்திருத்தங்களை நீண்ட காலமாக எதிர்த்தது என்பது நன்கு அறியப்பட்ட உண்மை. சிசிடிவி கேமராக்கள் மற்றும் கட்டைவிரல் ரேகை–, பயோமெட்ரிக் வருகை மற்றும் அணுகல் கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டபோது சுங்கத் துறை செய்த எதிர்ப்புக்கள், அவர்களின் தொழிற்சங்கத்தால் முன்வைக்கப்பட்ட 'சுயநல'க் கோரிக்கைகள் இலங்கையின் 'தேசிய நலனுக்கு' எதிரானது என்பதற்கான தெளிவான அறிகுறியாகும். இன்று புதிய ஆளும்தரப்பால் நியமிக்கப்பட்ட புதிய இயக்குநர் நாயகத்தை வெளியேற்றவே அவர்கள் தங்கள் பழைய தந்திரோபாயங்கள் மூலமாக முயற்சிக்கின்றனர் என்று தெரிகிறது. இந்த ஆளும்தரப்பு நிலைநிறுத்தி வரும் ஊழல் எதிர்ப்பு ஆணையைக் கருத்தில்கொண்டு, சுங்கத் துறையையும், குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை போன்ற ஒத்த அமலாக்க நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்த இது ஒரு நல்ல நேரமாகும்.

கொழும்பு துறைமுகத்தில் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான சவால்களைக் கருத்தில்கொண்டு, இலங்கையின்முக்கிய வர்த்தகம், கடல்சார் மற்றும் தளவாட சங்கங்களுடன் சேர்ந்து, நாட்டின் பொருளாதாரத்தில் துறைமுக நெரிசலின் தாக்கத்தைக் குறைக்க பல குறுகிய கால மற்றும் நடுத்தர கால தீர்வுகளை முன்மொழிந்துள்ளன.

இதற்கிடையில், இலங்கையின் கூட்டு வர்த்தக சபைகளும் சங்கங்களும் ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டு துறைமுக நெரிசலுக்கான தீர்வுகளை முன்மொழிகின்றன. அவை குறித்தும் ஆளும்தரப்புக் கவனத்தில்கொள்ளவேண்டும்.

'கப்பல்கள் கொழும்பைத் தவிர்த்து, மிகவும் திறமையான அண்டை துறைமுகங்களுக்குச் செல்வதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன, இது ஒரு நிரந்தர மாற்றமாக இருக்கும், இதன் விளைவாக கொழும்பு துறைமுகத்திற்கான கொள்கலன் அளவுகள் இழக்கப்படுகின்றன, சரக்கு கட்டணங்கள் உயர்கின்றன, அத்துடன் சரக்கு அனுப்புபவர்கள் மற்றும் கப்பல் பாதைகளுக்கான கூடுதல் செலவுகளும் ஏற்படுகின்றன. இறக்குமதியாளர்கள், போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் பிற அனைத்து பங்குதாரர்களும் இந்த தாமதங்கள் காரணமாக வணிக வாய்ப்புகளை இழக்கின்றனர், இது அத்தியாவசிய பொருட்களுக்கான அதிக விலைகளுக்கும் இலங்கை மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கும் பங்களிக்கிறது,' என்று அந்த அறிக்கை எச்சரித்தது.

துறைமுக செயல்பாடுகள், வர்த்தக செயல்திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் அழுத்தமான கவலைகளை நிவர்த்தி செய்ய ஆளும்தரப்பு அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டு வர்த்தக சபைகளும் சங்கங்களும் பரிந்துரைக்கின்றன. இவற்றில் குறுகிய கால மற்றும் நடுத்தர முதல் நீண்ட கால பரிந்துரைகள் பல அடங்கும்.

பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கும்வளர்ச்சியடைவதற்கும்ஆளும்தரப்பு தொழில்துறை மற்றும் தனியார் துறை பங்குதாரர்களைக் கேட்டு அவர்களுடன் இணைந்து பணியாற்றுவது முக்கியம். தேசிய நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய சுங்கத்தின் நிறுவன கலாச்சாரம் மற்றும் கட்டமைப்பு மாற்றப்படவேண்டும்,





## அமெரிக்க ஆட்சி மாற்றம் யாருக்கு சாதகம்?

உபுல் யோசப் பெர்னான்டோ

2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியான பிறகு, இலங்கையில் உள்ள அமெரிக்க உதவி நிறுவனத்தின் (யு.எஸ்.எய்ட்) தலைவரை அழைத்து, ஆளும்தரப்புக்கு எதிரான சமூக ஊடகப் பரப்புரைக்கு நிதியளிக்கிறீர்களா என்று கேட்டார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சமந்தா பவர் அமெரிக்காவில் அமெரிக்க உதவி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட பின்னரே கோட்டாபய இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தார். 2015 ஆம் ஆண்டு ராஜபக்ச ஆட்சியைக் கவிழ்க்க சமந்தா பவர் சதி செய்கிறார் என்று ராஜபக்சக்கள் குற்றஞ்சாட்டினர், மேலும் அவரது புதிய நியமனம் ராஜபக்சக்களுக்கு மிகவும் சாதகமாக இல்லை என்று வெளிநாட்டு உறவுகள் ஆய்வாளர்கள் கூறியிருந்தனர்.

இருப்பினும், கோவிட் காலத்தில் கோட்டாபய ஆளும்தரப்பு தடுப்பூசிகளைப் பெற சமந்தா பவர் உதவினார். முன்னாள் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவின் வேண்டுகோளின் பேரில் அவர் அவ்வாறு செய்தார்.

2022 ஆம் ஆண்டு ரணில் ஜனாதிபதியானபோது, சமந்தா பவரிடம் உரத்திற்கான உதவி கேட்டார், அவரும் அதனை வழங்கினார். சமந்தா பவர் காரணமாகவே தான் ஜனாதிபதி பதவியில் இருக்கிறார் எனவும், அவர் உரத்திற்கான உதவியை தனக்கு வழங்கவில்லை என்றால், பொதுமக்களின் எதிர்ப்பை எதிர்கொண்டு வீட்டிற்குச் செல்ல வேண்டியிருந்திருக்கும் என்றும் ரணில் கூறினார். ரணில் ஜனாதிபதியான பிறகு, சமந்தா பவர் வந்து ரணிலை சந்தித்தார்.

அநுரா ஜனாதிபதியான பிறகு, அனுராவுடனும் ஒரு சம்பிரதாயபூர்வ கலந்துரையாடலை நடத்தினார். இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வந்து அநுராவை சந்தித்த பிறகு, அநுராவுடன் தொடர்பு கொண்ட வெளிநாட்டு இராஜதந்திரி சமந்தா பவர் ஆவார். அந்த உரையாடலின்போது, அநுரா அவரிடம் உதவி கேட்டார், மேலும் அவர் உதவ வேண்டிய முன்னுரிமைகளின் பட்டியலைக் கேட்டார். அந்த கலந்துரையாடலின் முடிவுகளில் அநுரா அதிக நம்பிக்கை கொண்டிருந்தார்.

சமந்தா பவர் இனி 'அமெரிக்க உதவி' (யு.எஸ்.எய்ட்) அமைப்பின் தலைவராக இருக்கமாட்டார். உலகம் முழுவதும் அமெரிக்க உதவியை நிறுத்த டிரம்ப் நிர்வாகம் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. கடந்த வாரம், டிரம்பின் உத்தரவின் காரணமாக அமெரிக்க உதவியைப் பெறும் அரசு சாரா நிறுவனங்களின் பல திட்டங்களை அடியோடு நிறுத்தவேண்டியிருந்தது.

டிரம்பின் உத்தரவு இலங்கையில் மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்த அரசு சாரா நிறுவனங்களுக்கு ஒரு பெரும் அடியாக இருந்தாலும், அது அநுராவின் ஆளும்தரப்பிற்கு மிகுந்த ஆறுதலாக இருக்கும். ஆளும்தரப்பின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நிற்கும் அரசு சாரா நிறுவனங்கள் பெரும்பாலும் அமெரிக்க உதவிகளை இழக்கின்றன. அந்த உதவியை நிறுத்தப்படுவது அநுரவின் ஆளும்தரப்பிற்கு நிம்மதியாகும்.

இலங்கையுடனான அமெரிக்க தொடர்பு இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங் மற்றும் சமந்தா பவர் மூலமே இருந்து வந்தது. ஜூலி சுங் இலங்கையில் தனது பதவிக்காலத்தை அடுத்த சில மாதங்களில் முடிக்க உள்ளார். சமந்தா பவர் இப்போது அமெரிக்காவில் பதவியில் இல்லை.

சந்திரிகாவும் மங்களவும் சமந்தா பவர் மூலம் இலங்கை அரசியல் தலைவர்களுக்கும் அமெரிக்காவில் உள்ள ஜனநாயகக் கட்சி ஆளும்தரப்பினருக்கும் இடையே தொடர்புகளை உருவாக்கினர். இப்போது குடியரசுக் கட்சி ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துள்ளது. இலங்கை எதிர்க்கட்சியோ குடியரசுக்கட்சியுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளது. இந்த நேரத்தில், குடியரசுக் கட்சி ஆளும்தரப்புடன் உறவுகளை ஏற்படுத்துவதைவிட, தனது ஆட்சியின் ஜனநாயக விரோத முடிவுகளில் அமெரிக்கத் தலையீட்டை நிறுத்துவதே அநுராவுக்கு அரசியல் ரீதியாக சாதகமாக உள்ளது.



# கிழக்கு, வடமத்திய மாகாணங்களுக்கு புதிய பிரதம செயலாளர்கள் நியமனம்

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, கிழக்கு மாகாண பிரதம செயலாளராக டீ.ஏ.சீ.என்.தலங்கம மற்றும் வட மத்திய மாகாண பிரதம செயலாளராக ஜே.எம்.ஜயசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.





அவர்களுக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டள.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டீ.ஏ.சீ.என். தலங்கம இதற்கு முன்னதாக மீன்பிடி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் ஜே.எம். ஜயசிங்க கேகாலை மாவட்ட செயலாளராகவும் சேவையாற்றியுள்ளனர்.

# பனைமரங்கள் தறித்தவர்கள் மீது பொலிஸ் நிலையத்தில் முறையீடு

(சுபேசன்)

உரிய அனுமதியின்றி சட்டவிரோதமாக பனை மரங்களைத் தறித்த ஆலய நிர்வாகம் மற்றும் தனியார் மீது பனை அபிவிருத்திச் சபையால் கடந்த செவ்வாய்கிழமை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியொன்றில் அனுமதியின்றி 10 பனை மரங்களைத் தறித்த ஆலய நிர்வாகம் மீதும் - அதேவேளை தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னாலைப் பகுதியில் சட்டவிரோதமாக 6 பனை மரங்களை வெட்டிய தனியார் ஒருவர் மீதும் பொலிஸ் நிலையங்களில் பனை அபிவிருத்திச் சபையால் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.







# போராட்டம் ஆரம்பமான காலங்களில் இளைஞர்களிடம் விடுதலை உணர்வை விதைத்தவர் மாவை சேனாதிராசா

## நாடு கடந்த தமிழீழ அரசு பிரதமர் இரங்கல்

தமிழர் உரிமைக்காக சிறை சென்ற தமிழ்த் தேசியத்தின் அடையாளம் மாவை சேனாதிராசா. அவர்களின் மறைவு தமிழ் தேசியத்திற்கும், தமிழ் மக்களுக்கும் இழப்பாகும்.

மாவை சேனாதிராசா அவர்களின் இழப்பின் துயரில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கமும் பங்குகொள்வதுடன் , இழப்பின் துயரில்வாடும் அவரின் மனைவி, மக்கள், தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் , தமிழ்தேசியவாதிகள் அணைவரின் கரங்களையும் இறுகப்பற்றிக் கொள்கின்றது.

- இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் வெளியிட்டுள்ள அஞ்சலி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

காலங்கள் பல கடந்து விட்டாலும்,தமிழர் உரிமைக்காக பல போராட்டங்கள் ஆரம்பித்த காலத்தில் உருவாகிய போராளிகள் வரிசையில் மாவை சேனாதிராசாவும் ஒருவராவர். இவர் 1973 காலத்தில் இளைஞர்களின் மனங்களில் விடுதலை உணர்வை ஊட்டியவர் என்ற ஒரே காரணத்திற்காக அன்றைய சிறீமாவோ அரசாங்கத்தால் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு சிறைவாசத்தை 5 வருட காலங்களுக்கு மேல் அனுபவித்தார்.

மாவை சேனாதிராசா, காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் ஆகியோர் சிறைவாசம் கழித்து புகையிரதத்தில் யாழ் நகரத்திற்கு வந்தபோது யாழ் நகர மக்கள் உணர்ச்சி பூர்வமான வரவேற்பைக் கொடுத்தார்கள். அந்தவரவேற்பில் பங்கு கொண்ட நினைவு இன்றும் என் நெஞ்சத்தில் உள்ளது.

மாவை சேனாதிராசா பலதடவைகள் கைதுசெய்யப்பட்டு கடும் சித்திரவதைகளை அனுபவித்தார். இச் செய்தியானது அன்றைய காலத்து இளைஞர்கள் மனதில் அஹிம்சைமீது இருந்த நம்பிக்கை தளர்ந்து உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராடுவதே ஒரே வழி என்ற சிந்தனையை உருவாக்கியது என்றால் மிகையாகாது.

மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், குட்டிமணி, முத்துகுமாரசாமி(குமார்) உட்பட 42பேர் இன விடுதலைக்காய் சிறையில் வாடும் தமிழ் இளைஞர்கள் என்ற செய்தி தமிழர் மனத்தில் கொதி நிலையை உருவாக்கியது.

அன்றைய கால பத்திரிகைகளான தந்தை செல்வாவின் சுதந்திரனும், ஈழநாடும் முக்கியசெய்திகளை பிரசுரித்து சுதந்திர தாகத்தை வளர்த்துவந்ததுமட்டுமல்லாது, இலங்கை தீவின் மூலை முடுக்கெல்லாம் வாழ்ந்த தமிழர் மனதில், சிங்கள பௌத்தருடன் சேர்ந்து வாழவேமுடியாது, பிரிந்து செல்வதே ஒரே வழி என்ற பாதைக்கும் வழி சமைத்தது.

இவர்கள் சிறையில் வாடிய காலத்தில் தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை போன்ற அமைப்புக்களும் தோன்றி ஆயுதவழிமூலம் தீர்வு எனும் கருத்தியலை உருவாக்கின.

இலங்கை குடியரசு நாடாக உருவாக்கப்பட்டமையும் இக்காலத்தில் தான் நடந்தது. குடியரசு தினம் கரிநாளாக கடைபிடிக்கப்பட்டது. வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்ற உறுதியான நிலைப்பாட்டில் கிழக்கு தாயகத்தில் மிகவும் காத்திரமாக மாவை சேனாதிராசா பணியாற்றிமை குறிப்பிடத்தக்கது.

மாவை சேனாதிராசாவின் உடன் பிறந்த சகோதரன் தமிழீழ விடுதலைப் போராட்ட ஆரம்ப காலங்களில் தமிழீழத் தேசியத்தலைவருடன் இணைந்து செயல்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எம் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற உயர் சிந்தனையை எம் மத்தியில் விதைத்து, தமிழர் உரிமை மீட்புக்கு அறுபது (60) வருடங்களுக்கு மேலாக தமிழ்தேசிய அரசியல் போராட்டத்தில் அயராது உழைத்தவர் மாவை சேனாதிராசா.

அத் தேசியத்தை கட்டிக்காப்பதே நாம் அவருக்கு செய்யும் பெரிதான அஞ்சலியாகும். தமிழரின் தலைவிதி தமிழரின் கையில் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம். - என்றுள்ளது.



# மாவை சோ.சேனாதிராசாவின் மறைவு உலகவாழ் தமிழர்களுக்கு பெரும் இழப்பு

## சட்டத்தரணி உதுமான்கண்டு நாபீர் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்று ஆளுமைகளுள் தவிர்க்க முடியாத ஒருவராக செயற்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்கும் இலங்கை தமிழரசு கட்சிக்கும் பாரிய இழப்பாகும் என சமூக செயற்பாட்டாளரும் நாபீர் பவுண்டேஷன் நிறுவனமான சட்டத்தரணி உதுமான் கண்டு நாபீர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாவை சேனாதிராஜா தனது 64 வருட அரசியல் பயணத்தில் அரசியல் தலைவராக தமிழ் மக்களுக்காக கடும் பணியாற்றியுள்ளார்.

யுத்தம் முடிவுறுவதற்கு முன்னரும் பின்னரும் இவரது அரசியல் முன்னெடுப்புகள் பல்வேறு பரிணாமங்களை கொண்டுள்ளதுடன் மக்கள் விடுதலைக்காக போராட்டங்கள் பலவற்றை செய்து சிறைவாசம் அனுபவித்தவர்.



ஜனநாயக நீரோட்டத்தில் நாடாளுமன்றஉறுப்பினராக இருந்த காலங்களில் இவரது குரல் அடக்குமுறைக்கு எதிரான மக்களின் குரலாக நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தது.

இவரது பிரிவில் துயருறும் அன்னாரது குடும்பத்தாருக்கும் உலகம் வாழ் தமிழ் மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என சமூகசெயற்பாட்டாளரும் நாபீர் பவுண்டேஷன் நிறுவனருமானசட்டத்தரணி உதுமான் கண்டு நாபீர் குறிப்பிட்டுள்ளார்.



# தாறுஸ்ஸபா அமையத்தின் இலவச தஜ்வீத் குர்ஆன் வழங்கும் நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

தாறுஸ்ஸபா அமையத்தின் ஏற்பாட்டில் தாறுஸ்ஸபா குர்ஆன் மத்ரஸா மாணவர்களுக்கான இலவச குர்ஆன் பிரதிகளை வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை மாலை கல்முனை தாறுஸ்ஸபா தலைமையகத்தில் உஸ்தாத் சபா முஹம்மத் நஜாஹி தலைமையில் நடைபெற்றது.

இதன் போது கல்முனை பிரதேச பதில் பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் (எல்.எல்.பி) பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாக கல்முனை பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரி எம்.எம்.எம். ஜெய்சான் ,கல்முனைக்குடி 09 பிரிவு கிராம சேவகர் எம்.ஏ . றஹ்னா ,அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹிப்கா ஜெஸ்மின், ஆகியோர் வருகை தந்ததுடன் மாணவர்களுக்கான குர்ஆன் பிரதிகளையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



# ஸ்ரீலங்கா தேசத்தின் சுதந்திரநாள் ஈழத் தமிழர் தேசத்தின் கரிநாள்

## நாடுகடந்த தமிழீழ அரசு தெரிவிப்பு

1948, பெப்ரவரி 4 இல் இருந்து சிறிலங்கா தனது சுதந்திர நாளாகக் கொண்டாடிவருகின்றது. ஆனால் அன்றைய நாள் ஆங்கிலேயரால் பறிக்கப்பட்ட தமிழர்களின் இறையாண்மை சிங்கள இனவாதப் பூதத்திற்கு தரைவார்க்கப்பட்ட நாளாகும்.

சிங்கள தேசத்தில் ஆட்சி மாறினாலும் பேரினவாத மூலோபாயத்தில் எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை. மாறாக சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்படவோ, நிறுத்தப்படவோ அல்லது பௌத்த மயமாக்கல் அகற்றப்படப் போவதில்லை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகட்கு நீதிவழங்கவோ, போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படவோ எந்தவாய்ப்பும் இல்லை.

இனப்படுகொலைக்கு முழுமையாக ஒத்துழைத்துதமிழர்களை,தமிழர்தேசத்தை அழித்து ஆக்கிரமித்தவர்களிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது.காலங்காலமாக தமிழர்தேசம் இந்நாளை கரிநாளாக பிரகடணப்படுத்தி சிங்கள தேசத்திற்கெதிராகப் போராடிவருவது போல்இம்முறையும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வடக்குக்கிழக்கில்போராட்டங்களுக்கான அறைகூவலை விடுத்துள்ளனர்.

தமிழர் தாயகத்தில் நடைபெறும் போராட்டங்களுக்கு பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்லூரி, பாடசாலை மாணவர்கள்,

சிவில் சமூகத்தினர், தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள், வர்த்தக சங்கத்தினர் மற்றும் அனைவரும் கறுப்புப் பட்டிகள் அணிந்தும், கறுப்புக் கொடிகளை ஏந்தியும், வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள், பல்கலைக்கழகம், கல்லூரி,

பாடசாலைகள் அனைத்திலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டும் தமது எதிப்பைத் தெரிவுப்பதுடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின், தாய்மாரின் எதிர்ப்புப் போராட்டத்தில் பெருமளவில் கலந்து கொள்ளுமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உரிமையுடன் அழைப்பு விடுக்கின்றது.

மேலும் புலம்பெயர் தேசங்களில் சிறிலங்கா சுதந்திரதின எதிர்ப்புப் போராட்டத்திற்கு பல்வேறுபட்ட அமைப்புக்கள் விடுத்த அழைப்பிற்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது தோழமையைத் தெரிவித்துக் கொள்வதுடன் புலம் பெயர் தமிழர்கள் கறுப்புப்பட்டி அணிந்தும், தமிழர் வணிக நிலையங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு எமது எதிர்ப்பை வெளிப் படுத்துமாறு அறைகூவல்விடுக்கின்றோம்.

அத்துடன் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இளையோரின் இணையவழி கண்டன எதிப்பு கருத்தாடல் நிகழ்வு பெப்ரவரி 4 இல் ஏற்பாடு செய்துள்ளது. இதில் ஐரோப்பிய, கனேடிய இளையோர் பங்கு பற்றுவது குறிப்பிடத்தக்கது.

சிங்கள தேசத்தால் ஆக்கிமிக்கப்பட்ட தமிழர் தேசம் விடுதலை அடையும் நாளே தமிழர்களின், தமிழர் தேசத்தின் சுதந்திர நாள். தமிழீழம் என்ற இலக்கை அடையும்வரை தொடர்ந்து போராடுவோம்.

# புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசாருக்குக் கௌரவமளிப்பு

(பாறுக் ஷிஹான்)

இன நல்லிணக்கம், பொதுமக்கள் தொடர்பாடல், போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டமைக்காக அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்திற்கான புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகராக பாலமுனையைச் சேர்ந்த உதுமாலெவ்வை மஹ்மூத்கான் இப்னு அசாருக்கு கல்முனை தலைமையக பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச் செயலாளர் எம்.ஐ .எம் ஜிப்ரி(எல்.எல்.பி) உள்ளிட்ட பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு வியாழக்கிழமை மாலை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றதுடன் மாலை அணிவித்து வரவேற்கப்பட்ட புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிறு கலந்துரையாடல் ஒன்றை பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்களுடன் மேற்கொண்டார்.

இதன் போது அங்கு கருத்து தெரிவித்த புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் -

எமது இலங்கை பொலிஸ் பதில் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனை மற்றும் வழிநடத்தலுக்கமைய ஒவ்வொரு பொலிஸ் நிலையத்தில் உள்ள சமூக பொலிஸ் பிரிவுடன் ஆலோசனைக்குழுக்கள் இணைக்கப் பட்டுள்ளன.

இது தவிர கல்முனை பிராந்தியத்தில் போதைப் பொருள் பாவனை, வீடு உடைப்பு,உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் உரிய தகவல்களை மக்கள் ஊடாக சரியாக கிடைக்கப்பெற்றால் அவ்வாறானபிரச்சினைகள்உடனடியாக எம்மால் தீர்க்க முடியும். பொலிஸ் ஆலோசனை குழு கூட்டங்கள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கீழ் நடைபெற வேண்டும். இவ்வாறான குழுக்கள் ஊடாக பல்வேறு செயற்திட்டங்களை இலங்கை பொலிஸ் முன்னெடுத்துள்ளது.

இந்த கல்முனை பிராந்தியத்தில் உள்ள சகல மக்களுக்கும் பணியாற்ற ஆவலாக வந்திருக்கின்றேன். அத்துடன் கல்முனை சமூக பொலிஸ் பிரிவுடன் இணைந்து ஆலோசனை குழு சரியான வினைத்திறனுடன் இயங்குவதைதற்போதுஎன்னால் காண முடிகின்றது. எனவே பல்வேறு செயற்திட்டங்களை இக்குழுவின் ஊடாக முன்னெடுக்க முடியும் என நம்புகின்றேன். - என்றார்.

மேற்குறித்த நிகழ்வில் கல்முனைதலைமையகபொலிஸ் பொறுப்பதிகாரி எம். றம்ஸீன் பக்கீர்உட்பட சமூகப்பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எஸ்.ஏ.வாஹிட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

## கட்சியின் ....

### (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலுக்கு ஓர் அத்தி வாரக்கல்லாக இருக்கின்றார். இன்றைய சூழலில் இருந்து பார்த்தால் அத்திவாரத்தில் ஓர் மூலக் கல்லாகக் காணலாம்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைமையை அவர் எடுத்தார். அதனைப் பாதுகாத்தார். தமிழ் அரசுக்கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இரண்டறக் கலந்திருந்த காரணத்தால் அது தேர்தலில் போட்டியிடவில்லை. புறந்தள்ளி வைக்கப்பட்டதாக இருந்தாலும் கூட கட்சியைப் பாதுகாத்து வைத்திருந்தார். அதனால்தான் 2003ஆம் ஆண்டு ஒரு பிரச்சினை வந்தபோது அந்தவேளையிலே தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் முகம் கொடுக்க முடியாத சூழல் வந்தபோது கட்சிக்காக நான் வாதாடினேன்.

இருப்பினும் மாவை அண்ணை தமிழரசுக் கட்சியைப் பாதுகாத்து வைத்திருந்தமையால் உடனடியாகத் தமிழ் அரசுக் கட்சியின் சினத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடக் கூடியதாக இருந்தது. இந்தக் காலத்திலேதான் நான் அவரை நேரடியாகச் சந்திக்கும் சூழல் ஏற்பட்டது. ஏனென்றால் சட்டத்தரணி கணேசலிங்கம் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர். தன்னுடைய வீடு விடுவிக்கப்பட வேண்டும் என உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அது நிராகரிக்கப்பட்டிருந்தது.

அப்போது மாவை அண்ணரும் கணேசலிங்கமும் எனது வீட்டுக்கு வந்து இப்படியாக நடந்துவிட்டது, சட்ட நடவடிக்கை எடுத்து இந்த நிலங்களை மீட்க வேண்டும் எனக் கேட்டார். காணிகள் விடுவிக்கப்படாது விட்டாலும் குறைந்தது 100 பேராவது வழக்கு வைத்தால் ஓர் அடையாளமாக இருக்கும் எனத் தெரிவித்தேன். அதற்கு அந்த இருவரும் யாழ்ப்பாணம் வந்து மக்களைத் திரட்ட முயன்றபோது மேலும் இருவர் மட்டுமே முன்வந்தார்கள். இதில் மூவரின் பெயர்களில் வழக்குப் போட்டோம். இதில் ஒருவர் உயிரிழக்க இரண்டாவது வழக்காளரின் வீடு விடுவிக்கப்பட்ட நிலையில் மாவை அண்ணையின் வழக்கு மட்டுமே தொடர்ந்து சென்றது. அந்த வழக்கை நடத்தியே வலிகாமம் வடக்கில் இத்தனை ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்க முடிந்தது. தனி ஒருவனாக துணிந்து அந்தக் காலத்திலேயே தனது பெயரில் அந்த வழக்கை அவர் தாக்கல் செய்தார்.

2013 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச இன்னொரு பகுதியைச் சுவீகரிக்க முயன்றபோதும் மாவை அண்ணை என்னை அழைத்து வந்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையம் உள்ள இடத்தில் வைத்து ஒரு மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினார். அதன்போது 10 ஆயிரம் பேரை வழக்கு வைக்க அழைத்தோம். இருப்பினும் 2 ஆயிரத்து 176 பேர் முன் வந்தார்கள். வலிகாமம் வடக்கு சுகிர்தன் அத்தனை உறுதிகளையும பரிசீலனை செய்து அனுப்பி வைத்தார். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கும் நிலுவையில் உள்ளது. அதன் காரணமாகவே இந்தப் பிரதேசம் விடுவிக்கப்பட்டது. தேசம் என்று சொல்லுகின்றபோது மக்களும் நிலமும் முக்கியமானவை.

மக்களும் நிலமும் இல்லாமல் ஒரு தேசம் கிடையாது. அந்த அடிப்படையில் மக்கள் நிலத்தில் வாழ வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவர் மாவை சேனாதிராசா. அவ்வாறு கண்ணும் கருத்துமாக நின்று அவர் செயற்பட்டதன் காரணத்தினாலே இன்றைக்கு இந்த மண்ணிலே நாங்கள் நிற்கக் கூடியதாக இருக்கின்றது. அவரின் இறுதிக் கிரியைகளை இந்த இடத்தில் நடத்தக்கூடியதாக உள்ளது. இன்று நான் வரும்போது மக்கள் வீடுகள் கட்டி வாழ்வதைப் பார்த்தேன்.

இந்த வலிகாமம் வடக்கு மக்கள் சந்தோசமாக வாழ அடிகோலியாக இருந்தவர் அண்ணன் மாவை. இப்படியாகப் பல விடயங்களைச் சொல்லலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியத்தின் ஓர் அடையாளமாக அதனுடைய அத்திவாரமாகப் பயணித்தவர் அண்ணன் மாவை. இன்றைக்கு அவர் மரணித்திருக்கின்றார். மாவை அண்ணனின் சரித்திரம் என்பது தமிழ் மக்களின் வரலாற்றோடு சேர்ந்து பின்னிப் பிணைந்தது -- என்றார்.

## இந்திய.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுழைந்தபோது ஏற்பட்ட அசம்பாவிதத்தை இந்திய தரப்பு பூதாகாரமான விடையமாக மாற்றியுள்ளது. அதை எங்களால் சகித்துக்கொள்ள முடியாதிருந்தது.

இந்திய மீனவர்களை அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் நுழைய வேண்டாம் என நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். அவர்கள் நுழைகின்ற சமயத்தில் இலங்கை கடற்படை அவர்களை கட்டுப்படுத்தாது அசமந்தப் போக்குடன் நடந்து கொண்டு இருக்கிறது.

இவ்விடயம் குறித்து இலங்கை ஆளும்தரப்பை நாங்கள் விமர்சித்து குறைகூறி வருகிறோம். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுல் நுழைகின்ற நாட்களில் இலங்கை மீனவர்கள் குறிப்பாக வட பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் துன்பங்களை அந்த மீனவர்களுக்கு ஏற்படுகின்ற சொத்து இழப்புக்களை கணக்கிட்டு பார்த்தால் சுமார் 700 மில்லியன் ரூபாய் சொத்துக்களை வடபகுதி கடலில் இழந்திருக்கிறோம்.

இந்திய மீனவர்களின் அத்து மீறிய நடவடிக்கையினால் எமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் இவ்வளவு நாசமாகியுள்ளன. எனவே இந்திய மீனவர்கள் உள்நுழைவதை தடுப்பதற்கு நாங்கள் அரசுக்கு விடுக்கின்ற கோரிக்கைகள் அல்லது அழுத்தங்கள் காரணமாக கடற்படையினர் இலங்கை கடல் எல்லையில் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். எனினும் இலங்கை எல்லையில் இன்றி எமது கரையோர பகுதிகளில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த இந்திய மீனவர்களே கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இப்படியான கைதுகளின்போது இடம்பெறும் அசம்பாவிதங்கள் குறித்து இந்திய தரப்பினரால் கூறப்படுகின்ற விடையங்களை சகித்துக் கொள்ள முடியாத நிலை உள்ளது.

சாதாரணமாக இந்திய மீனவர்களின் படகில் 5 முதல் 8 மீனவர்கள் மாத்திரம் கடலில் பயணிப்பதை நாம் பார்க்கின் றோம். ஆனால் குறித்த படகில் 13 பேர் வரை பயணித்துள்ளனர். ஒரு படகில் 13 பேர் பயணிக்க இந்திய தரப்பு எவ்வாறு அனுமதி வழங்கியது? பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் இந்திய மீனவர்களுக்கு மீன் பிடிச் சிட்டை வழங்குகின்றனர். இந்த நிலையில் இவர்கள் அனைவரும் ஒரே படகில் எவ்வாறு பயணித்தார்கள்?

இந்திய கடல் இல்லையைத் தாண்டக்கூடாது என்கின்ற நிபந்தனையும் குறித்த சிட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையிலே குறித்த நிபந்தனைகளையும் மீறி அவர்கள் வருகின்றனர்.

எனினும் அவ்வாறு வருகின்றவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு இதண்டிக்கப்பட்டு இமீண்டும் விடுவிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையிலே அவர்கள் தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான மீனவர்கள் மீது இந்திய தரப்பு இது வரை என்ன நடவடிக்கையை எடுத்துள்ளது?

தமது நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படுகின்றார்கள் என கூறும் இந்திய அரசு தமது மீனவர்களை பாதுகாக்க அவர்களே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தமது நாட்டு எல்லையையும் பாதுகாக்க வேண்டும். ஏன் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டிற்கு இந்திய அரசு வரவில்லை. இலங்கையில் தனது ஆதிக்கத்தை காண்பிக்கவே இந்தியா இவ்வாறு செயல்படுகின்றது. இதனை வட பகுதி மீனவர்களும் இலங்கை மக்களும் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

அத்து மீறி இலங்கை கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களை கட்டுப்படுத்த இலங்கை ஆளும்தரப்பு முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் குறிப்பாக கடற்படையினரின் நடவடிக்கைகளுக்கு நாங்கள் முழுமையாக உறுதுணையாக இருப்போம்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வருவதை தடுப்பதற்கு கடற்படைக்கும் இலங்கை அரசுக்கும் ஒத்துழைப்பு வழங்குவோம். இந்திய தரப்பிற்கு ஒரு செய்தியை கூற விரும்புகின்றோம். இலங்கை எல்லையை தாண்டி மீன் பிடிக்க வராதீர்கள். இவ்வாறு எல்லையை தாண்டினால் இவ்வாறான துன்பியல் சம்பவம் நடப்பதை தவிர்க்க முடியாது என்றார்.

## தூய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவது தொடர்பான அறிவுறுத்தலுடன் அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வீடுகளில் சேரும் குப்பைகளை வாரத்துக்கு இரு தடவைகள் ஒவ்வொரு வீடு வீடாகப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு குப்பைகளை வழங்க முடியாதவர்களுக்காக யாழ். மாநகர எல்லைக்குள் 9 பிரட்டு மையங்கள் (குப்பை சேகரிக்கும் நிலையங்கள்) காலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரையில் செயற்பட்டு வருகின்றன. கழிவகற்றல் செயன்முறைக்காகத் தனியார் உழவியந்திரங்களும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ். நகரப் பகுதி வர்த்தகர்களிடமிருந்து ஒரு நாளில் இரு தடவைகள் குப்பைகளைச் சேகரிக்கும் பொறிமுறையும் நாளை ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது. ஆரோக்கியமான, உளநலன் விருத்திக்காக யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் ஓய்வு நிலையங்கள், பூங்காக்களின் செயற்றிறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆரோக்கிய உணவகங்களைத் திறப்பதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

அங்கு செய்தியாளர்களிடம் பேசிய யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஸ்ரீவர்ணன் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்கள் டிஜிட்டல் மயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளன. அவற்றை தற்போது விரைவுபடுத்தியுள்ளன .

வறுமை ஒழிப்பு உட்பட்ட 'தூய இலங்கை' செயற்றிட்டத்தின் பல்வேறு கருத்திட்டங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கழிவு முகாமைத்துவம் தொடர்பில் மக்களிடம் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ள நிலையில், மக்களின் ஒத்துழைப்புடன் அதனையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களைத் தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த பங்குதாரர்களான மக்கள், வர்த்தகர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும்.

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளிலும் நாளை 'தூய இலங்கை' செயற்றிட்டத்தின் அங்குரார்பணம் இடம்பெறவுள்ளது.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள பல செயற்பாடுகளின் மாற்றங்களை மக்கள் எதிர்காலத்தில் உணரக் கூடியதாக இருக்கும் - என்றார்.

இந்த நிகழ்வில் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சுக்களின் சிரேஷ்ட உதவிச் செயலர் குருபரன், யாழ். மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் - யாழ்ப்பாணம் ஸ்ரீவர்ணன், வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பார்த்தீபன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

## எதிர்ப்புப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் சுதந்திர தினத்தில் எதிர்ப்பு போராட்டமாக முன்னெடுக்க உள்ளோம். இப்போராட்டத்தில் அனைவரும் ஆதரவு தந்து போராட்டத்தை வலுப்பெறச் செய்ய வேண்டும்.

எமது பிள்ளைகள் தொடர்பில் நீண்ட காலமாக போராடி வருகிறோம். போராட்டம் தொடர்ந்து கொண்டு இருக்கும் நிலையில், தீர்வினை தருவதற்கு அரசு தயாராக இல்லை.

மாறி மாறி ஆட்சிபீடம் ஏறும் அரச தலைவர்கள் தீர்வு தருவதாக கூறுவார்கள். நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வருகின்றோம்.

எமது வலிகளையும், உணர்வுகளையும் அறிந்தவராக ஆட்சி பீடத்தில் ஏறிய ஜனாதிபதியும் எமக்கு தீர்வினைத் தர முன்வரவில்லை.

காணாமல் போனோர் தொடர்பாக போராடும் வலையமைப்பினை தானாக சந்திக்க முன்வரவும் இல்லை. அது தொடர்பில் பேசவும் இல்லை.

அரசியல் கைதிகளாக சிறையில் துன்பப்படுகின்றார்கள். மக்களின் காணிகளில் இராணுவத்தினர் இருக்கின்றார்கள். மக்களின் காணிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகிறது.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியல் தீர்வுகள் இல்லை. இவ்வாறான நிலையில் சுதந்திர தினத்தை கொண்டாடி சர்வதேசத்துக்கு காட்ட முனைகின்றனர்.

1948ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்ற போதிலும், வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் சுதந்திரத்தை பெறவில்லை.

இந்த நிலையில்தான் எதிவரும் 4ம் திகதி சுதந்திர தின எதிர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ள உள்ளோம் என்றனர்.

## தனிப்பட்ட...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாவை சேனாதிராசாவும் நானும் 70களில் எங்கள் அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்கினோம். நான் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆனால் அவ்வாண்டு மாவை சேனாதிராசா பொதுத்தேர்தலில் வெற்றி பெறவில்லை.

இருப்பினும் அவர் ஏற்கனவே ஒரு இளம் தலைவராகப் பணியாற்றி வந்தார். யாழ்ப்பாணத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவிய காலகட்டத்தில் அவரைத் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப் பல சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அந்தக் காலகட்டத்தில் நான் ஒரு அமைச்சராகப் பதவிவகித்துக்கொண்டிருந்தேன். 1989க்குப் பிறகு அவரை நாடாளுமன்றத்தில் சந்தித்தேன். அந்தச் சந்தர்ப்பத்திலிருந்தே எமக்கிடையில் ஒரு நல்ல உறவு ஏற்பட்டது. வடக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாவை சேனாதிராசா அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அந்தக் காலகட்டத்தில் அவர் மக்களுக்காக குரல் எழுப்பினார்.

நான் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட போது மாவை சேனாதிராசா எழுப்பிய கேள்விகளுக்கு நாடாளுமன்றத்தில் நேரத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றேன். இனப்பிரச்சினைகள் தொடர்பில் அவர் அந்த சந்தர்ப்பங்களில் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கின்றார்.

முக்கியமாக 13ஆவது அரசமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் முழுமையான தீர்வுகளை எட்டுவது சாத்தியமில்லை என்றாலும், மாவை சேனாதிராசா அதனை அடிப்படையாகக் கொண்டே முன்னேற முயற்சித்தார்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்த நாங்கள் அனைவரும் உடன்பட்டோம். நான் ஜனாதிபதியாக பதவி வகித்தபோது மாகாண சபை மட்டத்தில் அதைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கினேன். மாகாணசபை வடக்கிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், அதன் அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக 8 மாகாண சபைகளுக்கும் அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக, ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதே எங்கள் அனைவரினதும நோக்கமாக இருந்தது. மேற்கு மாகாணத்திற்கு மட்டும் இதை மட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க, யாரும் தாழ்த்தப்பட்டதாக உணராத வகையில் நாம் செயல்பட வேண்டும். யாழ்ப்பாண மக்களுக்கு நில உரிமைகளை வழங்குவதில் மாவை சேனாதிராசா முன்னின்று செயற்பட்டார். காணாமல் போனவர்களின் பெயர்ப்பட்டியலை சரிபார்த்து அவற்றின் பணிகளை செய்து முடிப்பதிலும் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

இன்று, வடக்கில் ஒரு கடுமையான பிரச்சினையாக இருக்கும் இளைஞர் வேலைவாய்ப்பு நெருக்கடியைத் தீர்க்க நாம் ஒன்றிணைய வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தியிருக்கின்றார். மாவை சேனாதிராசா தனது நடவடிக்கைகளை வடக்கிற்கும் தமிழ்

தொடர்ச்சி ஒன்பதாம் பக்கம்

காலைக்கதிர் Kalaikkathir

## தனிப்பட்ட...

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கும் மட்டும் மட்டுப்படுத்தவில்லை. நாட்டின் பிற பகுதிகளிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் அவர் பெரும் பங்களிப்பைச் செய்தார்.

51 நாள் அரசியல் நெருக்கடியின்போதும் மாவை சேனாதிராசாவிடமிருந்து எனக்குப் பெரும் ஆதரவு கிடைத்தது. இவ்வாறு செயல்பட்ட ஒரு தலைவரின் இழப்பு வடக்கின் தமிழ் மக்களுக்கும், யாழ்ப்பாணத்திற்கும், நாட்டிற்கும் பெரும் இழப்பாகும் எனக்கு தனிப்பட்ட முறையில் நெருக்கமான ஒருவரை இழப்பதாக உணர்கின்றேன். மாவை சேனாதிராசாவின் மறைவுக்கு யாழ்ப்பாண மக்களுக்கும், அவரது கட்சியினருக்கும், அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது.

## மகிந்தவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நாடாளுமன்ற விவகார பிரதி அமைச்சர், சட்டத்தரணி சுனில் வட்டகல இதனைத் தெரிவித்தார்.

"30,000 சதுர அடி... ஐந்து ஆண்டுகள். முன்னாள் ஜனாதிபதி அவர்களே உங்களுக்கு மனசாட்சி இருந்தால், அதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். செல்லவில்லை என்றால்,... இன்னும் சில நாட்களில் அதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்பிப்போம். அதன்படி சட்டரீதியாக வெளியேற வேண்டி வரும். இப்போதே சென்று விட்டால் கௌரமாக இருக்கும். இனி அவரே யோசிக்க வேண்டும்" என்றார்.

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திலிருந்து எடுக்க முடியும் என்று யார் உத்தரவாதம் அளிக்க முடியும்? எந்த அரசியல்வாதிகளோ அல்லது அமைச்சர்களோ அதில் சம்பந்தப்படவில்லை. இந்தக் கணக்கியல் பணிகளை அரசு அதிகாரிகள் தாங்களாகவே செய்கின்றனர். அப்படியானால் அவை அனைத்தும் ஒரே இடத்தில் ஏன் இல்லை?

குறைந்தபட்சம் அரசு வாகனங்களின் எண்ணிக்கையை என்னிடம் சொல்ல முடியுமா? ஏன் என்றால் தணிக்கை செய்யப்பட்டிருந்தால் அவை இடம்பெற்றிருக்கவேண்டும். ஆனால் அது நடக்கவில்லை.

எங்கள் சமீபத்திய தணிக்கை அறிக்கைகளில் அதிக அளவு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு நிறுவனங்களுக்கு வாகனங்கள் இல்லை. நாங்கள் மிகவும் எளிமையான முறையிலேயே சரிபார்த்தோம் - என்றார்.

## நெல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பேசப்பட்டது. நெல் உலரவிடும் இயந்திரப்பொறியை முல்லைத்தீவு மாவட்டத்திற்குப் பெறுவது தொடர்பான ரவிகரனின் கோரிக்கைக்கு ஆளுநர் வேதநாயகன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

வெள்ள இடர் காரணமாக ஏற்பட்டுள்ள நெல் அழிவுகளுக்குரிய இழப்பிடுகள் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கப்படுதல், நெல்லுக்கான விலையை நிர்ணயித்தல், நெல் சந்தைப்படுத்தலில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல், காட்டு யானைகளால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்தல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அத்தோடு, அறுவடைக் காலத்தில் நெல் உலரவிடுதலில் விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல் நிலமைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் போதியளவு நெல் உலரவிடும் தளங்களோ, நெல் உலரவிடும் இயந்திரப் பொறித் தொகுதிகளோ இன்மையால் விவசாயிகள் பிரதான வீதிகளை நெல் உலரவிடும் தளங்களாகப் பயன்படுத்தும் அவலநிலை தொடர்பிலும், அவற்றால் ஏற்படும் சிக்கல் நிலை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் நெல் உலரவிடுதலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கில் நெல் உலர வைக்கும் இயந்திரப் பொறித்தொகுதி ஒன்றினை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பெற்றுத்தருமாறு நாடாளுமன்ற உறுப்பினரால் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர்பிரிவில் கூழாமுறிப்புப்பகுதியில் சுமார் ஒரு இலட்சம் நெல்மூட்டைகளை களஞ்சியப்படுத்திவைக்கக்கூடிய நெல்களஞ்சியசாலை ஒன்று கடந்தகாலத்தில் உலகவங்கியின் நிதிஉதவியில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த நெற்களஞ்சியசாலைக்கு நெல்உலரவிடும் இயந்திரப் பொறியினை வழங்கினால், இலகுவாக நெல்லினை உலரவைப்பதுடன், களஞ்சியப்படுத்தவும் முடியுமென்ற ஆலோசனையும் நாடாளுமன்ற உறுப்பினரால் ஆளுநர் வேதநாயகனிடம் முன்வைக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கையை ஆளுநர் ஏற்றுக்கொண்டார். நெல் உலரவிடும் பொறித்தொகுதியை முல்லைத்தீவிற்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஆளுநர் இதன்போது உறுதியளித்தார்

இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட கமக்கார அமைப்புகளின் அதிகார சபையின் தலைவர் பென்னம்பலம் சத்தியமூர்த்தி, உபதலைவர் வேதநாதன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# மறைந்த தலைவருக்கு அஞ்சலி

மறைந்த தலைவர் மாவை சேனாதிராசாவின் புகழுடலுக்கு, முஸ்லீம் காங்கிறஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வெள்ளிக்கிழமை மாலையிலும் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் நேற்றுக் காலை 7:00 மணியளவில் அஞ்சலி செலுத்தினார்.















# தேசிய உற்பத்தியில் 25 சதவிகித பங்களிப்பை பனைசார் தொழிற்துறை ஊடாக ஈட்டித்தரலாம்

## ஜனாதிபதியிடம் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிப்பு

(சுபேசன்)

நாட்டினுடைய தேசிய உற்பத்தியில் 25 சதவிகித பங்களிப்பை பனைசார்ந்த தொழிற்துறை ஊடாக ஈட்டித்தர முடியும் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெரியப்படுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற யாழ்ப்பாணமாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தவை வருமாறு -

ஏனைய திணைக்களங்கள் போன்று நாம் அரசாங்கத்திடம் நிதியுதவி கோரவில்லை.எமது பனை சார் தொழிற்சங்கங்களும், பனை அபிவிருத்திச் சபையையும் சுதந்திரமாக செயற்படக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

பனைசார் தொழிற்துறை ஊடாக தேசிய உற்பத்தியில் 25 சதவிகித பங்களிப்பை செய்யத் தயாராக இருக்கிறோம்.

வருடாந்தம் 24 பில்லியன் ஏற்றுமதி வருமானத்தைப் பெறக்கூடிய தொழிற்துறையாக வளர்த்தெடுத்துத் தருகிறோம்.

பெருந்தோட்டத் தொழிற்துறையில் பனை



சேர்க்கப்பட்டிருந்தாலும் நிலம் அற்ற பயிராக இந்த பனை காணப்படுகிறது. இதனால் பனை சார் தொழிலாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

பனைசார் தொழிலாளர்களுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

திக்கம் வடிசாலை முப்பது வருடங்களுக்கு மேலாக சூறையாடப்பட்டு தனியார் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

நாட்டினைக் கட்டியெழுப்பக் கூடிய இயலுமை



எமது தொழிற்துறைக்கு உண்டு. ஒரு பனையில் இருந்து ஏறத்தாழ ஒரு மில்லியன் ரூபா வருமானத்தைப் பெற முடியும்.

100 சதவிகிதம் ஏற்றுமதி செய்யக்கூடிய தொழிற்துறையாக மாற்ற முடியும்.

கடந்த காலங்களில் நடந்த ஊழல் -மோசடிகளால் மிகவும் பாதிக்கப்பட்ட தொழிற்துறையாக பனைத் தொழிற்துறை காணப்படுகிறது.

எனவே உடனடியாக நடவடிக்கை எடுத்து வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். - என மேலும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

# சங்குவேலி அ.த.க பாடசாலையின் கால்கோள்விழாவும் சின்னம்சூட்டலும்



சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மேற்படி விழா கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக கடந்த வியாழக்கிழமை மு.ப 9.00 மணிக்கு அருள்மிகு சங்குவேலி சிவஞான பிள்ளையார் ஆலயத்தில் பூஜை வழிபாடு இடம்பெற்றதைத்தொடர்ந்து தரம் 1 மாணவர்கள் தரம் 2 மாணவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு விருந்தினர்களுடன்பாண்ட் வாத்தியம் சகிதம் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம் என்பவற்றை தொடர்ந்து எமது பாடசாலையின் ஸ்தாபகர் ஸ்ரீமான் கா.வைத்திலிங்கபிள்ளை மண்டபத்திற்கு அழைத்துச் சென்றதை தொடர்ந்து அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் தரம்1 வகுப்பாசிரியர் திருமதி தர்மகுமாரி அம்பிகைவாகன் அவர்களின் வரவேற்புரையை அடுத்து அதிபரின் தலைமையுரை இடம்பெற்றது.

கால்கோள் விழாவிற்கான பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வலிகாமம் கல்விவலய ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகரும் எமது பாடசாலைக்கான வலயமட்ட அபிவிருத்தியாளருமாகிய செல்வி ஞானசோதி மகேந்திரன் அவர்கள் வழங்கிய இனிப்புப் பண்டம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

கனடாவில் வதியும் பழைய மாணவரான சண்முகரட்ணம் ஸ்ரீஸ்கந்தராசாவால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட கொப்பிகள் அடங்கிய எழுதுபொருள் தொகுதிகள் வழங்கப்பட்டன.

அமரர் பேரம்பலம் பரம்சோதிநாதன் அவர்களுடைய ஞாபகார்த்தமாக அவருடைய மருமகன் மற்றும் மகளான திரு,திருமதி ராஜன் சிவகாமி தம்பதியர் அன்பளிப்பாக வழங்கிய புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.

தேசிய சேமிப்பு வங்கி மானிப்பாய்க்கிளையினரால் வழங்கப்பட்ட பரிசுப்பொ ருள்களும் வழங்கப்பட்டன.

என்பன தரம் 1 இன் 13 மாணவர்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டன.

ஏற்கனவே கடந்த புதன்கிழமை இம் மாணவர்களுக்கு திரு.ரவீன்திரநாதன் குடும்பத் தினரால் சப்பாத்துகளும் அதற்கான காலுறைகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தரம்1 மாணவர் களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையாற் றினார்.

அதனைத்தொடர்ந்து மாணவ முதல்வர்களின் பொறுப்பாசிரியர் திருமதி பிரியதர்சினி மதிவதனன் அவர்களின் நெறிப்படுத்தலில் மாணவ முதல்வர்களுக்கு இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகைதந்த சமாதான நீதிவான் லயன் கே.டினேஸ் ஆயுகு, விருந்தினர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரால்சின்னம்சூட்டி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மாணவ முதல்வர்கள் தீபம் ஏந்திய வண்ணம் சத்தியப்பிரமாணம் செய்து தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

அடுத்து இந்நிகழ்விற்கான பிரதம விருந்தினர் உரையாற்றினார். அடுத்து பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி சசிகலா மகேஸ்வரன் அவர்களின் நன்றியுரையை தொடர்ந்து பாடசாலை கீதத்துடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

அந்தவகையில் இவ்விழா விற்கான அனுசரணையை வழங்கிய லயன் கே.டினேஸ் அவர்களுக்கும் தரம் 1 மாணவர்களுக்கான பல்வேறு ஊக்குவிப்பு பரிசில்களை வழங்கிய அனைத்து பெருந்தகையர்களுக்கும் எமது அழைப்பையேற்று வருகைதந்து சிறப்பித்த பிரதம விருந்தினர்கள், பழைய மாணவர் சங்க செயலாளர் திருமதி.ஜெயந்தினி சற்குணலிங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் திருமதி மிதிலா செல்வறஞ்சன் ஆகியோருக்கும் இவ்விழா சிறப்பாக நடைபெற சகல விதமான ஒத்துழைப்புக்களையும் நல்கிய அணைவருக்கும் பாடசாலை சமூகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர்.

# மத்திய முகாமில் எலிக்காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம்

(ஹாரீஸ்)

நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரிவில் 15 இற்கு மேற்பட்டவர்கள் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அடையாளம் காணப்பட்டதையடுத்து பிரதேசமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நாவிதன்வெளி பிரதேசசபை, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் இணைத்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு ஊர்வலம் வெள்ளிக்கிழமை மத்தியமுகாம் நகரில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.முஜீப் தலைமையில் இடம் பெற்றது.

இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என மேலும் பலர் கலந்து கொண்டனர்.





# ஆசிரியர் பணியில் சேர்ந்த பின்னர் 5 ஆண்டுகள் இடமாற்றமே கேளாதீர்

## கிழக்கு மாகாண ஆளுநர் உறுதி

(ஹஸ்பர்)

இங்குள்ள 250 ஆசிரியர்கள், 2024 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண அரச ஆசிரியர் போட்டி பரீட்சைக்கான ஆட்சேர்ப்பின் இரண்டாம் கட்டத்தில் 9,000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், அவர்கள் தங்கள் கடமைகளை முறையாகச் செய்யவும், எதிர்கால சந்ததியினரை திறம்படவும்திருப்திகரமானமுறையிலும் முன்னேற்றவும் வாழ்த்துக்கள் என கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்தார்.



திருகோணமலையில் ஆசிரியர்க நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



மேலும், இந்த ஆசிரியர்கள் குறைந்தபட்சம்5ஆண்டுகளுக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பதவிகளில் இருந்து மாற்றப்பட மாட்டார்கள் என்றும், எனவே, இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்காமல் மாணவர்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்க அவர்கள் ஈடுபட வேண்டும் என்றும் ஆளுநர் கூறினார்.

மாகாணத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப 250 பேர் போதுமானவர்கள் அல்லர் என்றும், எதிர்காலத்தில் ஆசிரியர் சேவைக்கு விரைவாக கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

மேலும் பேசிய பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான மேம்பட்ட மனித வளங்களை உருவாக்கும் முதன்மைப் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு என்றும், புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களிடம் தெரிவித்த பிரதி அமைச்சர், ஆசிரியர் தொழிலை மிகவும் பொறுப்பான பணியாகக் கருதுமாறு வலியுறுத்தினார்.

மேலும் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் -

இந்த ஆட்சேர்ப்பு மற்றும் நேர்முகப்பரீட்சைகள் தெரிவில் எந்த அரசியல் செல்வாக்கும் இல்லை என்றும், தேவையற்ற அரசியல் தலையீடுகள் இல்லாமல் வெளிப்படைத்தன்மையுடனும் சுதந்திரமாகவும் தொடர்ந்து பணியாற்ற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மேலும் இந்த புதிய கலாசாரம் இப்போது நடைமுறையில் உள்ளது. அது தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் கூறினார். அவர்கள் தங்கள் கடமைகளை முறையாகச் செய்யவும், எதிர்கால சந்ததியினருக்கு அவற்றை உற்பத்தி ரீதியாகப் பயன்படுத்தவும், தங்கள் சேவைகளை திருப்திகரமான முறையில் செய்யவும் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.

மேலும், இந்த ஆசிரியர்கள் குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து மாற்றப்பட மாட்டார்கள் என்றும், எனவே, இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்காமல் பிள்ளைகளுக்கு அதிகபட்ச சேவையை வழங்க அவர்கள் பாடுபட வேண்டும் என்றும் கூறினார்.





காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா இரட்டை கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடித்து வழக்கு விசாரணையை வவுனியா நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர். குறித்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப்பிரிவினர்விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா நீதிமன்றில் வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபர் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனு விண்ணப்பித்துள்ளார். அதன் வழக்கு விசாரணை வரவுள்ளதால் விளக்கமறியலை நீடித்து வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. 100

## குருவிக்காட்டு ஈரநிலப் பகுதியில் சுத்தப்படுத்தல் 650 கிலோ இலத்திரனியல் கழிவுகள் சேகரிப்பு

(சுபேசன்)

சேவ் ஏலைவ் நிறுவனமானது சாவகச்சேரி பிரதேசசபையுடன் இணைந்து வியாழக்கிழமை தென்மராட்சி குருவிக்காட்டு சூழலில் 'ஸ்ரீபிளாஸ்டிக் பூஜ்ஜிய முயற்சி' செயற்திட்டத்தின் கீழ் சுத்துப்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தது.



இதன்போது ஈரநிலப்பகுதியில் காணப்பட்ட சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய 650கிலோகிராம் இலத்திரனியல் பொருள்கள் சேகரிக்கப்பட்டு பிரதேசசபையின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டன.



மேற்படி ஈர நில சுத்தப் படுத்தல் செயற்பாட்டில் தன்னார்வலர்கள்,பிரதேச மக்கள், சேவ்ஏலைவ்நிறுவனஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## தேசிய நல்லிணக்க செயற்பாடுகளுக்கு சர்வமதத் தலைவர்களும் ஒத்துழைப்பு

### நீதி அமைச்சரிடம் தெரிவிப்பு

அண்மையில் சர்வமத தலைவர்கள் சார்பாக பௌத்த மத குரு ஹலகம தர்மரன்சி தேரர் இந்து மத குரு சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா இஸ்லாமிய மத குரு அல் செய்க் ஹசன் மௌலானா கிறிஸ்தவ மத குரு அருட் தந்தை நிஷான்குரே ஆகியோர் நீதி அமைச்சர்ஹர்சனநாணயகாரவுடனான சந்திப்பு அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது தேசியஒருமைப்பாட்டு அரச கரும மொழிகள் பிரதி அமைச்சர் முனீர் முலப்கபர் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது அமைச்சருடனான கலந்துரையாடலில் தேசிய நல்லிணக்க செய்யற்பாடுகள் நாடு எங்கிலும் முன்னெடுத்து செல்லப் பட்டு அனைவரும் இந்த நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி வழிகாட்டலின் கீழ் இன மத மொழி வேறுபாடுகளை கடந்து நல்லிணக்க செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என கலந்துரையாடப்பட்டது .

இதற்கான செயற்திட்டங்களை வகுத்து சர்வமத தலைவர்கள் முன்னெடுப்பது சிறந்தது என நீதி அமைச்சர் தனது கருத்தினை தெரிவித்தார்.

குத்தகலந்துரையாடலின்பின்னர்நீதி அமைச்சருக்கு சர்வமத குழு சார்பாக பாபுசர்மாஅமைச்சருக்குபொன்னாடை போர்த்தி ஹலகம தர்மரன்சி தேரர் வாழ்த்து மடல் ஒன்றினையும் வழங்கி ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக்கொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.02.2025இல் வெளியிடப்பெற்றது